## உண்மையில் நடந்தது என்ன?

# ‘மிசா’ அடக்குமுறை: கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கைதும் சர்ச்சைகளும்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் – தோழர் தியாகு – விடுதலை ராஜேந்திரன் விளக்கம்!

(நேற்றைய தொடர்ச்சி)

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் மு.குணசேகரனை நெறியாளராகக் கொண்டு நடைபெற்ற சிறப்பு விவாத நிகழ்ச்சியின் விவரம் வருமாறு:**

அக்கிரமமான அருவறுப்பான அவதூறு. ஒரு அரைகுறையான ஒருத்தருக்கு நினைவு தவறி சொல்றாரு, ஒரு எரர் இன்ஃபெக்ட், எரர் இன்லா அப்படி எல்லாம் சமாதானமே சொல்ல முடியாது. திட்டமிட்ட அவதூறு ஒரு பொய், முழு பொய், கொடிய பொய், ஒரு பிளாக் லைக், இதைத் தவிர இதுக்கு வேறு என்ன இருக்க முடியும். இதனால நான் என்ன சொல்றேன்னா, இந்த ஆர்க்யுமெண்ட்டை நம்ம பேஸ் பண்ணி முறி அடிக்கணும். ஏன்னா இந்த அவதூறை நம்பக்கூடிய ஒரு கூட்டம் இருக்குதுங்கறது தான் நீங்க சொல்ற அந்த நிலை.

**நெறியாளர்:** நிகழ்காலத் தமிழ்நாடு, அதை நம்புற, இடத்துல கொஞ்சம் பேரு…

**தோழர் தியாகு:** நிகழ்காலத் தமிழ்நாடு எல்லாம் இல்லைங்க. நம்ம அந்த விவாதத்துக்குள்ள போக வேணடாம்.

**நெறியாளர்:** இன்றைக்கு நிறைய பேர் இன்னைக்கு வந்து அரசியலை அறியாதவர்கள் மிசாவ தெரியாதவங்க இந்த இன்ஸ்டாவ ரீல்ஸ் பார்க்கிறவங்க ஷாட்ஸ் பார்க்கிறவங்களுக்கு அமைச்சர் சட்ட அமைச்சர் நிர்மல் குமார் சொன்னது உண்மைன்னு நம்புவாங்க, விஜய் பேசினது உண்மைன்னு நம்புவாங்க…

**தோழர் தியாகு:** இல்லை. அது உண்மை இல்லை. பொய்ன்னு நம்ம அவர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவோம்னு சொல்றேன். நான் ஒன்றும் தப்பா எல்லாம் சொல்லல. அது உண்மை இல்லை பொய்ன்னு சான்றுகளோடு அவங்க வந்து காட்டட்டும், நான் கேட்கிறேன்ல, மிசா கைதி, மிசா கொட்டடியில் இருந்தாரு, மிசா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டார். மிசா சட்டத்தின்படி காவல் உத்தரவு போட்டிருக்கிறாங்க, எல்லாத்தையும் வெளிப்படுத்தியாச்சு. அவர் அந்த பிப்ரவரி 1ஆம் தேதி முதல் நெருக்கடி நிலை முடிந்து வெளியே விடுகிற காலம் வரைக்கும் சிறையில் தான் இருந்தார். ஒரு ஆண்டுக்கு மேல, இதெல்லாம் தெளிவா தெரிந்த செய்திதானே. நீங்க இதுக்கெல்லாம் சான்று கேட்டா என்ன அர்த்தம். அதுக்கு மேலே இஸ்மாயில் ஆணையம் அறிக்கை இருக்குது. இப்ப நம்ம ஃபேட்டுவலா நான் சொல்றேன், ஜெயில் பழக்கத்தை வச்சு சொல்றேன்.

**நெறியாளர்:** இஸ்மாயில் ஆணையம்னு சொல்றீங்க. இஸ்மாயில் ஆணையம்னா என்னன்னு சொல்லுங்களேன்?

**தோழர் தியாகு:** நான் சொல்றேன். நீதிபதி மூ. இஸ்மாயிலுன்னு கேள்விப்பட்டிருக்கீயா, தமிழ்நாட்டில் தமிழ் தெரிந்த கடைசி தலைமை நீதிபதி அவர்தான். ஒரு இஸ்லாமியர். கம்பனை பற்றி பேசினா எல்லோரும் ரசிச்சு கேட்டுக்கிட்டு இருப்பாங்க. தமிழ் இலக்கியத்தில் வல்லவர் அவரு. அந்த இஸ்மாயில் விசாரணை எல்லாம் நீங்க எல்லாம் படித்தீங்கள் என்றாலே நிறைய பாடங்கள் கிடைக்கும். இஸ்மாயில் கமிஷன்னு நம்பர் டு விட்னஸ் யாருன்னா, ஸ்டாலின் தான் ரெண்டாவது விட்னஸ். அங்கே நடந்த ஒரு விவாதத்தை மட்டும் நான் உங்களுக்கு சொல்கிறேன்.

**நெறியாளர்:** சிறையில் அடக்குமுறை நடக்கிறது. அதை விசாரிக்கிறதுக்கு போடப்பட்டிருக்கின்ற ஒரு கமிஷன்?

**தோழர் தியாகு:** போடப்பட்ட ஆணையம், நீங்க அது வந்து என்னன்னா, ஷா கமிஷனுக்கு முன்னாலயே போடப்பட்ட ஆணையம்.

**நெறியாளர்:** ஷா வந்து நேஷனல்…

**தோழர் தியாகு:** ஷா வந்து மொரார்ஜி தேசாய் ஆட்சிக்கு வந்த பிறகு போடுறாங்க. இங்கே பிரபுதாஸ் பட்வாரி ஆளுநராக இங்கே அனுப்பி வைக்கிறாங்க. உடனே, ஏன்னா நாங்க எல்லாம் ஜெயில்ல அப்ப, என்ன பண்றோம்னா, பிரபுதாஸ் பட்வாரி அறிக்கை விட்டுக்கிட்டே இருக்கிறார். எல்லா ஊர்லையும் அரசியல் கைதிகளை விடுதலை பண்றோம். தமிழ்நாட்டிலேயும் எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை பண்ணணும் என்று அவர் சொல்லிக்கிட்டே இருக்கிறார்.

எம்.ஜி.ஆர். வருவதற்கு முன்னால் நான் சொல்றேன். அப்படி அவர் போட்ட உத்தரவுதான் இஸ்மாயில் ஆணையம். எம்.ஜி.ஆர். அரசு போட்ட உத்தரவு அல்ல. அப்படி இஸ்மாயில் ஆணையத்தை போட்டு, உத்தரவு போட்டு நடத்துறாங்க. அந்த ஆணையத்தில் சந்துரு வந்து வழக்கறிஞரா. இளம் வழக்கறிஞரா சி.பி.எம். கைதிகளுக்காக அவரு வாதிட்டார். வேறு பல வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள். ஜெயிலுக்கே போய் பார்த்தாருங்க. சந்திரு சி.பி.எம். கைதிகளை சந்திச்சு அதில் ஸ்டாலின் வந்து அவருடைய புத்தகத்திலே எழுதி இருக்கிறார்.

ஒரு இளம் வழக்கறிஞர் இன்னைக்கு நீதியரசர் தாரு. அவர் சி.பி.எம். கைதிகளை எல்லாம் பார்த்துட்டு போனாரு. அவர் வந்துட்டு போனதுக்குப் பிறகு எங்களுக்கு என்னென்ன பொருள் எல்லாம் கொடுத்தாங்க. சோப்பு, லுங்கி எல்லாம் கொடுத்தாங்க என்றெல்லாம் எழுதி வச்சிருக்கிறார். அவர்தான் சந்திருன்னு அப்புறம் தெரிஞ்சுகிட்டேன். இப்போது எழுதுறார். அதில் என்ன முக்கியமான விஷயம்னா வித்யாசாகர் தரப்பில் ஒரு வாதம் முன்வைக்கப்பட்டது. என்ன வாதம் முன் வைக்கப்படுதுன்னா?

மார்ச் மூணாம் தேதி அன்றைக்கு ஸ்டாலினை அவங்க அப்பா நேரில் பார்க்க வந்தார். பார்க்க வந்தபோது ஸ்டாலின் எப்படி இருக்கிற? உன்னை எப்படி நடத்துறாங்க? என்று கேட்டார். நல்லா நடத்துறாங்க, என்னை அடிக்கலைன்னு ஸ்டாலின் அப்பாவிடம் சொன்னார். இதை வைத்து நான் கடிதம் மூலமா உடனடியாகவே அதிகாரிக்கு, மற்றவங்களுக்கு தெரியப்படுத்தினேன். இன்றைக்கு முன்னால் முதல்வர் வந்திருக்கிறாரு. அவர் பையனை பார்த்தாரு, பையன் கிட்ட இவங்க திரும்பத் திரும்ப கவர்னர் அலுவலகத்தில் இருந்து மத்திய அரசில் இருந்து கடிதம் வந்துகிட்டே இருக்கு. சென்னை சிறையில் ஏதோ நடக்குறதா சொல்றாங்க என்ன உண்மை என்று கேட்டுக்கிட்டே இருக்காங்க, எதுவுமே இல்லை அவரு.

**நெறியாளர்:** ஜி.லட்சுமணன் பார்லிமெண்டில் பேசி இருக்காரு, அதற்கு பிரமானந்த ரெட்டி பதில் சொல்லி இருக்கிறார்.

**தோழர் தியாகு:** இரண்டாம் தேதி அன்றைக்கு இரவு கொட்டடி போக மறுத்து வம்பு செய்ததாகு குறைந்தபட்ச பல பிரயோகம் செய்து, அவர்களை உள்ளே அனுப்பவேண்டி இருந்ததுன்னு ஜெயலரை விட்டு ஒரு நோட் எழுதுறாங்க. கீழே சூப்பிரண்டெண் ஆர்டர் என்ன எழுதுறார்னா, இப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று அவர்களை எச்சரிக்கவும் என்று கீழ எழுதுறார்.

இதெல்லாம் ரெக்கார்ட் தயார் பண்ணிக்கறாங்க, பின்னால ஏதாவது பிரச்சினை வரும் என்பதற்காக. இந்தச் சூழல்ல கலைஞர் வந்து நேர்காணல், கலைஞர் வந்து பல களத்தில் முயற்சி பண்ணார் ஒரு பக்கம் நெருக்கடி நிலைக்கு எதிரான போராட்டம், முரசொலியில் தொடர்ந்து போட்டுட்டு வருகிறார். திருமணங்க ளில் யார் கலந்து கொள்ள முடியாதவர்கள் என்ற ஒரு பட்டியல் வெளியிட்டு மிசா கைதிகள் பட்டியலை வெளியிட்டார்.

இப்படி எல்லாம் நடந்துகிட்டு இருக்கும் போது கவர்னர் ஆபீஸ்ல இருந்து போன் பண்ணி, நீங்க உங்க பையனைத் தானே பார்க்கணும் இந்த தேதியில் நீங்க போய் பார்த்துக்குங்க, அப்படின்னு கேட்குறாங்க நான் பார்கிறேன், மிச்ச பேரெல்லாம் இல்ல நீங்க முதல்ல பார்த்துட்டு வாங்க, அதுக்குப் பிறகு மிச்ச பேரை பரிசீலிக்கிறோம். இது அவங்க பதில், முதல்ல மிச்ச பேரை எல்லாம் பார்த்து முடிக்கட்டும், நான் கடைசியா நான் போய் பார்க்கிறேன். ஜெயிலுக்குப் போனவங்கள அவங்க அவங்க குடும்பத்தார் முதல்ல பார்க்கணும், அவங்க குடும்பத்தார் முதல்ல பார்க்கட்டும் ஜெயில்லே இருக்கறவங்கள எல்லாம் போய் பார்த்துட்டு வரட்டும், அப்படி சொல்லிதான் இவரு மூணாம் தேதி ஸ்டாலின் அவர் என்ன கிட்ட நேரடியா ஸ்டாலினும் விவரித்தார். ரெண்டு பேருமே என்கிட்ட சொன்னாங்க, என்ன நடந்துச்சுங்கறதை.

அப்போது கலைஞர் சொன்னாரு, நான் போனேன், ஸ்டாலின் வந்தான், ஒரு முழுக்கை சட்டை போட்டிருந்தான், வெள்ள சட்டை முழுக்கை சட்டை, அது தொலதொலன்னு இருந்துச்சு, அவன் அளவுக்கான சட்டை இல்லை என்று கலைஞர் சொன்னார். வழக்கமாக அவன், அரக்கை சட்டை தான் போடுவான். இன்னைக்கு முழுக்கை சட்டை போட்டிருந்தான். அப்போ ஏதோ ஒரு காயத்தை மறைக்கிறதுக்கு தான் அவனிடம் சொல்லி முழுக்கை சட்டை போட்டு அழைச்சுட்டு வந்து காயத்தை மறைச்சு கூட்டிட்டு வந்துருக்காங்கன்னு எனக்கு நல்லா புரிஞ்சிச்சு. சரி நம்ம கேள்விப்பட்ட செய்திகள் உண்மைதான் என்பதை நான் உறுதி செய்து கொண்டேன் என்று சொல்றார்.

அந்த இஸ்மாயில் ஆணையத்தில் இதை காரணமாக வைத்து இஸ்மாயில் சொல்றாரு, நிச்சயமாக ஸ்டாலின் உண்மையே சொல்லி இருக்கவே முடியாது. ஏன்னா அவர் இப்படி என்னை அடிச்சிட்டாங்கன்னு சொல்லி இருந்தா யாருக்குமே குடும்பத்தினர் இன்டர்வியூ பார்க்க அனுமதி அதுக்குப் பிறகு கிடைச்சிருக்காது. சிறை அதிகாரிகள் மேலும் துன்புறுத்தி இருப்பார்கள். எனவே வித்யாசாகர் சொல்லுகிற இந்த வாதத்தை நான் நிராகரிக்கிறேன், என்று யார் இஸ்மாயில் எழுதி இருக்கிறார்.

**நெறியாளர்:** ஒன்று அரசியல் கைதி இல்லை. இப்போது ஏன் இதை செய்யுறாங்க, இன்றைக்கு தேர்தல் நடக்குது, ஆட்சி மாற்றம் நடக்குது, ஜனநாயகம் இருக்குதுன்னா, அன்றைக்கு நெருக்கடி நிலையை எதிர்த்ததுனால, இன்றைக்கு இவையெல்லாம் நடக்குது. அது இல்லாமல் போனா, இந்தியா ஒரு சர்வாதிகார நாடாக அன்றைக்கு போயிருக்கும். நெருக்கடி நிலையில் ஜெயிலுக்குப் போனவங்களை தியாகிகளாக கொண்டாடணும். ஜனநாயக உரிமையை பாதுகாத்தவங்கன்னு செலிபரேட் பண்ணணும், மாறாக தமிழ்நாட்டில் புதிதாக அரசியல் இயக்கம் தொடங்கி, ஆட்சிக்கு வந்த ஒரு கட்சி அதை கொச்சைப்படுத்துவதும் மிசாவில் என்ன நடந்துச்சுன்னு தெரியுமா? வரலாற்றை வேண்டுமென்றே திரிப்பதும் பொய் பிம்பம் நீங்கலெல்லாம் ஜெயிலுக்குப் போய் தியாகம் பண்ணீங்கன்னு ஒரு பொய் பிம்பத்தை கட்டமைக்கிறீங்கன்னு சொல்றாங்களே அது ஏன்?

**விடுதலை இராஜேந்திரன்:** திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரலாற்று ரீதியாக இருக்கின்ற கிடைத்துள்ள பெருமை, அந்த வரலாற்றுப் பெருமிதங்களை அடியோட தகர்த்து எறிந்து, அதனுடைய பிம்பத்தை குலைக்கணும், அப்படிங்கிற ஒரு அடிப்படை உள்நோக்கத்தோடு தான் இப்படி திட்டமிட்டு, இது செயல்படுவதாக நான் நினைக்கிறேன்.

பொய்யயும் புனை சுருட்டையும் கலந்த ஒரு நெரட்டிவை செட் பண்ணி அந்த உண்மையான வரலாற்றை, திசை திருப்பினா, ஏற்கனவே ரீல்ஸ் மோகத்தில் இளைஞர்கள் கிட்டே கொண்டு போன மாதிரி, இதையும் கொண்டு போய், அவங்களுடைய கடந்த கால வரலாற்றினுடைய, அந்த தியாகத் தழும்புகளை கொச்சைப்படுத்தி அவங்களுக்கான ஒரு அடையாளத்தை முற்றாக அழித்து ஒழிக்கணும் அப்படிங்கிற ஒரு கொடூரமான ஒரு வன்மமான சிந்தனை தான் இதுக்கு பின்னாடி இருக்கிறதா நான் பார்க்கிறேன். இல்லாட்டி 50 ஆண்டுகளுக்கு முன்ன இருக்கிற சர்க்கார கமிஷனை இப்ப வந்து எடுத்து அவர் பேச வேண்டிய அவசியமே கிடையாது. இப்ப அதெல்லாம் எடுத்து பேசணும்ன்னு சொன்னா இதுக்கு பின்னாடி ஒரு பெரிய கான்ஸ்பிரசி ஒன்னு இருக்குன்னு நான் நினைக்கிறேன்.

திராவிட இயக்கம் அல்லது தி.மு.க. இன்றைக்கு 75 ஆண்டு கால வரலாறு உள்ள ஒரு இயக்கம். எத்தனையோ பேர் தியாகங்களை செய்து, எமர்ஜென்சியைக் கூட இந்தியாவிலே இவ்வளவு எதிர்த்து அதற்குக் கடுமையான விலை கொடுத்து, அதை ஆதரித்து போயிருக்கலாம் என்று சொன்னால், அவங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லாமல் போயிருக்கலாம்.

அதற்கு கடுமையான ஒரு விலை கொடுத்து தன்னை நிலைநாட்டி ஒரு கொள்கை அடையாளத்தோடு இருக்கிற ஒரு இயக்கம். கொள்கை அடையாளத்தோடு இருக்கின்ற ஒரு இயக்கம் தமிழ்நாட்டில் எதுவுமே இருக்கக் கூடாது. கொள்கை அடையாளங்கள் உள்ள இயக்கங்கள் தமிழ்நாட்டில் இருந்ததுன்னு சொன்னா, வலதுசாரி பிற்போக்கிய பார்ப்பணிய இந்துத்துவ சிந்தனைகள் வளரவே முடியாது. இதை சுத்தமா காலி பண்ணிட்டு தான் நம்ம புதுசா ஒரு நிலத்தில், நம்முடைய வலதுசாரி, மதவாத, சாதியவாத கருத்துக்களை எல்லாம் கொண்டு வந்து நிறக முடியும். அப்படியின்கிற ஒரு பெரிய அஜெண்டாவோடதான். இந்த இமேஜை குலைக்கின்ற, உடைக்கிற ஒரு சதி நடக்கிறதாதான் நான் பார்க்க வேண்டியிருக்கு.

அதற்கு இவர்களை எல்லாம் ஒரு கருவியா பயன்படுத்தப் போறாங்களோ? அப்படின்னுதான் நான் நினைக்க வேண்டியிருக்கு. அடுத்து வருகின்ற தேர்தலுக்குள் தி.மு.க.வுடைய இமேஜையே நான் காலி பண்ணப் போறேன். தி.மு.க.வினுடைய பிம்பத்தையே நான் உடைச்சு எறிஞ்சிடப் போறேன். அப்படி பிம்பத்தை உடைக்கறது மட்டும் இல்லாமல், பொய்யான கதைகளைச் சொல்லி, பொய்யைச் சொல்லி அந்த ஒரு கீழ்த்தரமான விஷயங்களை பேசி நாம் பண்ணிட முடியும். அப்படியின்கிற ஒரு கற்பனையில் அவங்க வந்து களம் இறங்கி இருக்காங்க.

எதிர்க்கட்சிகள் ஒன்று இருக்கு. தமிழ்நாட்டில் ஒரு சிந்தனை மரபுள்ள எழுத்தாளர் இருக்காங்க, சிந்தனையாளர்கள் இருக்காங்க, தமிழ்நாட்டில் எவ்வளவோ கருத்துப் போராட்டங்கள் எல்லாம் நடந்துகிட்டு இருக்கு, தமிழ்நாட்டினுடைய அந்த ஒரு சட்டம் எல்லாம் தமிழ்நாடில் இருக்கு, அப்படி இருக்கிறதைப் பத்திய புரிதலோ, அறிதலோ இல்லாத, ஒரு கும்பல் இந்த ரீல்ஸை வச்சிட்டு எல்லாமே மாத்திடலாம் அப்படிங்கற ஒரு கற்பனையில் இருக்கிற ஒரு கும்பல் தான், இந்த வரலாற்றுப் பெருமைகளை உடைக்கிற இந்தக் கீழ்த்தரமான வேளையில் இருந்துட்டு இருக்குறாங்க. இந்தக் கீழ்த்தரமான வேளைகளை எதிர்த்து, இவங்களை அம்பலப்படுத்தி இந்த வரலாறுகளை மக்கள் கிட்ட கொண்டு போய் சேர்க்க வேண்டிய ஒரு பெரிய கடமை இருக்கு, அதற்கான ஒரு சூழலை அவர்கள் இன்றைக்கு உருவாக்கி இருக்காங்கன்னுதான் நினைக்கிறேன்.

இதை ஒரு நல்ல விதமாக நாம் பயன்படுத்தி, இந்த பொய் முகங்களை, இந்த பொய் வேடதாரிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் இருக்குன்னு நினைக்கிறேன். நீங்க அவ்வளவு சீக்கிரம் அதெல்லாம் மாத்திட முடியாது. 75 ஆண்டுகள் உள்ள வரலாறு உள்ள ஒரு இயக்கத்தை நீ இப்படிதான் வந்து பொம்பளைக்காக கைது பண்ண, அதுக்காக கைது. இன்னும் சொல்லப் போனா, மிசாவில் கைது செய்யப்பட்ட பலர் மேல இரண்டாம் கட்ட தலைவர்கள்தான் கைது பண்ணாங்க.

அப்படி சில சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்கின்ற போது, அவர்களை திருட்டு வழக்கு, தடையை உடைச்சாங்கங்கிற வழக்கு, அந்த வழக்கு போட்டு கூட மிசாவில் கைது பண்ணியிருக்காங்க. உதாரணம் சொல்லனும்ன்னா மயிலாடு சட்டமன்ற உறுப்பினர் கிட்டப்பா பெரிய சுயமரியாதை வீரர், அவரை எதுல கைது பண்ணாங்க, ராத்திரி 12 மணிக்கு ஒரு பெட்டிக் கடை பூட்ட உடைச்சு க்கிட்டு இருந்தாரு, அப்படின்னு சொல்லி ஒரு வழக்கை போட்டு, அந்த வழக்கை அப்படியே மிசாவாக மாத்தி கைது பண்ணாங்க, உள்ளே போடுறதுக்கான வாய்ப்பைத் தேடி இப்படி பண்ணாங்க.

அந்த மாதிரி நடந்திருக்கு மிசாவில். ஆனால் தலைவர்கள் இது போன்ற விவரங்களில் எல்லாம் கைது பண்ணது என்ன காரணம்? இந்திரா காந்தி கைது செய்ததற்கு என்ன காரணம்? தேசத்தை வந்து ராணுவத்தையே வந்து கலகம் பண்ண தூண்டினாங்க, நாட்டை வந்து ஆபத்தை உண்டாக்கினாங்க, முதல் ரெண்டு மூணு பிரதமர்களை இந்த நாட்டில் உருவாக்கினாங்க. இதைல்லாம் இந்திரா காந்தி சொன்ன விஷயங்கள். காஷ்மீரில் முதலமைச்சரா இருக்கிறவர பிரதமர்ன்னு அழைக்கலாம்னு ஒரு மரபு இருந்துச்சு. அப்போ தமிழ்நாட்டில் கலைஞரை பிரதமர் அவர்களே, அப்படின்னா ஏன் காஷ்மீர் உரிமை கலைஞருக்கும் வேணும், அப்படிங்கிற அர்த்தத்தினால் பிரதமர் அவர்களே என்று பேசினாங்க. உடனே இரண்டு பிரதமர்கள் இந்த நாட்டில் பேசப்பட்டார்கள். இதெல்லாம் இந்திரா காந்தி சொன்ன விஷயங்கள். இன்னொரு விஷயம் என்னவென்றால் எல்லாமே வன்முறை சக்திகள், அதனாலே கைது பண்ணுன்னு சொல்றாங்க. அந்த அம்மாவே இப்படி ஒரு பொய்யான பிம்பத்தை கட்டமைக்க முயற்சித்து தோத்து போயிடுச்சு அந்த அம்மா.

**நெறியாளர்:** அவங்களுக்கு ஒரு தேவை இருந்தது. அவங்களுக்கு அவங்களுடைய அரசியலை தக்க வச்சுக்கறதுக்கு தேவை இருந்தது. இன்றைக்கு ஒரு ஹீரோவுக்கு வில்லன்களை ஏன் தேடுறார்கள்?

**விடுதலை இராஜேந்திரன்:** இவங்களுக்கு வில்லன்கள் தேவைப்படுகிறது. இவர் ஹீரோவா நடிக்க வேண்டி இருக்கு. ஹீரோவா நடிக்கறதுக்கு ஏதாவது ஒரு வில்லன் நடிக்க வேண்டிய அவசியம் இருக்கு. அதனால நீங்க வந்து யாராவது ஒருத்தங்களை பிடிச்சு வில்லனா ஆக்கணும், அப்படின்னு நினைக்கிற ஒரு பிம்பத்தை உடைக்கிறது வந்து ஒரு மோசமான ஒரு சூழ்ச்சி. இதை வந்து நிச்சயமாக தமிழ்நாட்டு மக்கள் ஏத்துக்க மாட்டாங்க. இது வந்து மிசா வேறதான். இது எதிர் வினைதான் நிச்சயமாக உண்டாக்கும். அதனால் எமர்ஜென்சி நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் செய்தது என்பது தி.மு.க.வுடைய வரலாற்றில், அதனுடைய இயக்கப் போராட்டம் என்பது பொன்னெழுத்துக்களால் பொறிக்கக்கூடிய ஒரு காலகட்டம்தான்.

கலைஞர் எப்படி அதை எதிர்கொண்டார், எப்படி துணிச்சலா அவர் எதிர்த்து நின்னாரு. சொல்லப் போனா இந்தியாவிலேயே முதன் முதலாக அவசர நிலைக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினதே கலைஞர்தான். ஏன்னா அண்ணாவை பற்றி முரசொலியில் அவர் எழுதின ஒரு கருத்துக்காக அதை எழுதக்கூடாதுன்னு பத்திரிகை சென்சார் தடை விதிக்கப்பட்டப்ப, இவர் தனிப்பட்ட அச்சகத்தில் போய், ஒரு நோட்டீஸ் எடுத்து அச்சடிச்சுகிட்டு, அவர் அங்கிருந்து அண்ணா சாலைக்கு, அண்ணா சிலை அருகே ஊர்வலமாக வந்து, சென்சார் ஆபீஸ்க்கு போய் உண்ணாவிரம் இருக்கப் போறோம் என்று கிளம்பினது. இந்தியாவிலேயே எமர்ஜென்சியை எதிர்த்து நடத்தப்பட்ட முதல் போராட்டம் அப்படின்னு வரலாற்றிலே பதிவு செஞ்சிருக்காங்க. அப்படிப்பட்ட ஒரு தியாக வரலாறு. பத்திரிகை சுதந்திரம், அந்த பத்திரிகைக்கு தலைப்பெல்லாம் கூட வெண்டைக்காய், விளக்கெண்ணெய் பூசுங்க அப்படின்னு எல்லாம் எதிர்த்து போராடியது. அப்புறம் ஹிட்லரா படம் போட்டது முரசொலி.

இந்திரா காந்தி மாறி மாறி ஹிட்லரா மாறுவதைப் போன்று படம் போடப்பட்டது. அப்படி ஒரு மாற்றம், அப்போது செல்லப்பான்னு சொல்லி முரசொலியுடைய ஓவியர். அதற்காக அவர் முரசொலியில் படம் போடவே கூடாதுன்னு சொல்லி சென்சார் தடை விதிச்சாங்க. அந்த காலகட்டத்தில் கலைஞர் ஒரு கார்ட்டூனிஸ்டா மாறி கலைஞரே படம் போட ஆரம்பிச்சாரு. ஒரு கார்ட்டூனிஸ்டாக, ஒரு போராளியாக, ஒரு எழுத்தாளராக, ஒரு பத்திரிக்கையாளராக, ஒரு களப் போராளியாக எப்படி தனக்கு கொடுக்கப்பட்ட அந்த அடக்குமுறை காலத்தை ஒரு ஜனநாயகத்தை உண்டாக்கக் கூடிய ஒரு தலைவராக இருக்கிற வரலாற்றை உருவாக்கியது தமிழ்நாட்டில் சாதாரண விஷயம்மில்லை.



மு.குணசேகரன் — தியாகு — விடுதலை ராஜேந்திரன்

அந்தப் பெருமைக்குரியதை எப்படியாவது உடைக்க வேண்டும். ஆனால் எவனாலேயும் உடைக்க முடியாது அந்தப் பெருமையை. இன்றைக்கு ஸ்டாலின் வந்து பெண்கள் வழக்கு என்றால் ஏன் அவர் மிசாவில் போடணும், வேறு வழக்கல போடலாமே. எதுக்கு மிசாவில் போடணும். பெண்கள் குற்றத்தினால் கைது என்று ஒரு மந்திரி சொல்றார். அப்ப எதுக்கு அவரை மிசாவில் போடணும். அந்த அறிவு கூட வேண்டாமா?

**நெறியாளர்:** உருவ கேலியை சட்டமன்றத்தில் பண்றாங்க, இன்றைக்கு அதுக்கு ஸ்டாலின் அவர்கள் ஒரு பதில் சொல்லி இருக்கார். அதெல்லாம் உண்மைதான் என்னை வந்து தாக்கினது உண்மைதான், வரலாற்றை மறைக்க முடியாது. இந்த வினை, எதிர்வினை, அதுக்கான ரெஸ்பான்ஸை எப்படி பார்க்குறீங்க?

**தோழர் தியாகு:** இவர் வந்து என்ன பண்புள்ள ஒரு மனிதன் எனக்குப் புரியல. ஏன்னா முதலமைச்சரான பிறகு அவர் வீட்டில் போய் பார்க்கிறார். நான் தேர்தல் நேரத்தில் உங்களை பத்தி ஏதோ தவறுதலா பேசிட்டேன், ஐயம் வெரி சாரி, ஐயம் வெரி சாரி சாதாரணமா அவருக்கு வரும் போல. சினிமா ஷூட்டிங் நடக்குறது.

**விடுதலை இராஜேந்திரன்:** இதைக் கூட பண்பாடு கருதி ஸ்டாலின் வெளிப்படுத்தவே இல்லை. இப்போது பிரச்சினை வந்ததுக்கு அப்புறம்தான் அதைக் கூட சொல்ல வேண்டிய கட்டாயம்.

**தோழர் தியாகு:** அப்போது கேள்விப்பட்டது இப்போ அது உறுதியாகுது. நீ இவ்வளவு மோசமா பழையபடி செய்யறது அந்த கை இப்படி காட்டுனது, முதல்ல இப்போது இப்படி காட்டுறது சைகை செய்றது இதெல்லாம் என்ன மனசு அது, என்ன நோக்கம் உங்களுக்கு. என்ன சொல்றேன்னா அவர் அப்பாவியா இருந்துட்டு செய்றார்ன்னு நான் நினைக்கிறேன். அவரிடம் ஒரு டெலிபரேட்டான இந்த வில்லத்தனம் இருக்கு. ஏன் இதை சொல்றேன்னா, நீங்க ஊழல் பற்றி பேசுறீங்க, சர்க்காரியா கமிஷன் பற்றி பேசுறீங்க, மிசா பற்றி பேசுறீங்க, அதுக்கப்புறம் யாரோட எல்லாம் வரிசையா ஒப்பிட்டுக்கிறீங்க. 67 அண்ணா, 77இல் எம்.ஜி.ஆர், அப்புறம் என்.டி.ஆர், அப்புறம் விஜய்.

ஊழலை எதிர்க்கிற யாராவது ஜெயலலிதாவை ஏற்றுக் கொள்வாங்களா? இந்தியாவிலேயே ஊழல் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட சிறை சென்ற, ஒரு முதலமைச்சர் அவர் மட்டும் தானே. இந்தத் தகவல் கூட உங்களுக்குத் தெரியாதா? இதயத்துக்கு நெருக்கமா சட்டைப்பையில் செங்கோட்டையன் அவரை வைத்துக் கொள்வதற்கு நீங்க அனுமதிச்சிருக்கறீங்க, இந்த ஆவாச அர்ஜூனா வந்து திருப்பி திருப்பி சொல்றாரு, எங்களுக்கு இவங்க எல்லாம் வழிகாட்டிகள், என்ன ஏமாத்துறது அது? நானும் கலைஞரை மதிக்கிறேன் கருணாநிதி வேறு ஒரு உறுப்பினர் சொன்னதுக்கு ஐயம் சாரி சொன்னவரு. இப்ப இவர் கருணாநிதின்னு பேசுறாரு. கருணாநிதி அவருடைய பேரு. பேசிட்டு போங்க. யாரும் வேண்டாம்னு சொல்லலை. பத்திரிகையில் கருணாநிதி தான் போட்டுட்டு இருக்காங்க, அதெல்லாம் இல்லை பிரச்சினை, ஆனால் உங்களுக்கு நேர்மை இல்லைன்னு சொல்றோம். ஏன் எம்.ஜி.ஆர். மேல எஸ்.டி.எஸ். ஊழல் புகார் மணு கொடுக்கலையா? சர்க்காரியா கமிஷன் தான் உங்களுக்கு ஊழலுக்கு அடிப்படையின்னா அந்தப் புகார் மனு, என்ன அரசியல்ல ஊழல் இருக்கு, பணநாயகமா ஜனநாயகமா மாற்ற வரும் போது இந்த ஊழல் பரவலா இருக்கு, அதுக்கு எதிரா என்ன உருப்படியான நடவடிக்கை. நீங்க வந்து கர்நாடகத்தில் லோக் ஆயுக்தா போட்டாங்க, எத்தனையோ வழிகள் இருக்கு.

அதை பத்தி எல்லாம் பேசுங்க, நீங்க போலீஸ்ல ஊழல் ஒழிப்புக்காக என்ன நடவடிக்கை எடுக்கிறோம், நீதித்துறையில் வழக்கு என்று சொன்னால் பர வாயில்லை. ஆனால் இதை பயன்படுத்திக் கொண்டு நீங்கள், எது என்ன பின்னணி நான் பார்க்கிறேன். இப்போ திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிச்சு கட்டணும்ங்கறது பா.ஜா.க.வினுடைய நோக்கம். இந்துத்துவ சக்திகளுடைய நோக்கம். அதை நீங்க சர்வே பண்றீங்கங்கறது எங்க கணிப்பு. அதனால் தான் நம்ம தேர்தல்ல கூட அந்த காரணத்தை வச்சுதான் தி.மு.க. ஆதரிச்சோம்.

ஸ்டாலினும் சொன்னாரு டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்குமான போராட்டம்னு சொன்னாரு. என்ன பொறுத்தவரைக்கும் அது இன்னைக்கும் நீடிக்குது. அது முடிஞ்சு போன ஒரு செய்தி அல்ல. ஆனால் நான் என்ன சொல்றேன்னா, அன்றைக்கு மிசா. இன்றைக்கு துருக்மேனி, துருக்குமேனி கேட்ல முஸ்லிம்கள் தாக்கப்பட்டாங்க. இன்றைக்கு இந்தியா பூரா முஸ்லிம்கள் தாக்கப்படுறாங்க. சி.ஐ.ஏ. போராட்டத்தின் போது என்னென்ன நடந்துச்சு? டெல்லியில் என்னென்ன நடந்துகிட்டு இருக்கு இன்றைக்கு வரைக்கும். இப்படில்லாம் நிறைய இருக்குது.

இந்தப் போராட்டங்களுக்கு நடுவில் தமிழ்நாட்டில் ஒரு அரசியல் சூனியத்தை ஏற்படுத்துவதற்கு உங்களுக்கு தடையா இருப்பது தி.மு.க. அதுக்கான தி.மு.க.னா நான் ஒரு தலைவர், ரெண்டு தலைவரை மட்டும் நான் சொல்றேன். தி.மு.க.வினுடைய ஐடியாலஜி, அது பரவி இருக்கக்கூடிய விதம், அது இன்னொரு கட்சியை சுலபமா கலைச்சிட்டு போற மாதிரி, இந்தக் கட்சியை கலைச்சிட்டுப்போக முடியாது. அந்த ஒரு முயற்சியில் நீங்க ஈடுபட்டிருக்கீங்க.

**நெறியாளர்:** அரசியல் சூனியமாக்கணும்ன்றாங்களா?

**தோழர் தியாகு:** நான் அதைவிட முக்கியமா எதை கருதுறேன்னா, ஒரு கட்சி தலைமைங்கிறதை விட்டுவிடுங்க. மொத்தத்தில் ஒரு மனித உரிமைகளுக்காக, ஜனநாயக உரிமைகளுக்காக, அரசமைப்பு சட்ட விழிமியங்களை காப்பதற்காக, சிறைக்குச் சென்றால் அந்த சிறையில் எவ்வளவு தியாகம் வேணாலும் பண்ணலாம். ஜெயிலுக்குப் போனா எத்தனை வருஷம் வேணாலும் இருக்கலாம். ஆனால் ஜெயில் பாதுகாப்பான இடம், அது ஒரு செக்யூரிட்டியான இடம், அங்க விபத்துல செத்திட மாட்டீங்க, ஒருத்தன் வந்து உங்களை கொலை பண்ணிட மாட்டான். அந்த இடத்தை ஆபத்தான இடமா மாத்துறீங்கல்லை.

சிறைக்குப் போவது ஒரு தியாகம். ஆனா சிறைக்குப் போவதே ஒரு உள்ள போனாலே அழிச்சிருவோம். அந்தக் கதையை இவ்வளவு கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்தி, உங்களுக்கு இந்த பேசுறதுங்கறது இருக்கு பாருங்க. இது எல்லா ஜனநாயக சக்திகள், மனித உரிமைகளை நேசிக்கிற அத்தனை பேரும் இதை கண்டிக்கணும். நான் தி.மு.க.காரனோ, தி.மு.க. ஆதரவாளனோ அல்ல. ஒரு கட்டத்தில் ஆதரிக்கலாம் இன்னொரு கட்டத்தில் எதிர்க்கலாம். எதிர்காலத்தில் நம்ம தி.மு.க. பத்தி என்ன முடிவெடுக்கப் போறோம் எதுவும் தெரியாது.

ஆனால் ஒன்றை உறுதியா சொல்றேன், எந்தக் கட்சியாக இருந்தாலும் நீ மனித உரிமைகளை, ஜனநாயகத்தை நீ மதிக்கிறவனா, ஏன்னா இதே இஸ்மாயில் அறிக்கையை…

**நெறியாளர்:** எந்த ஒரு ஆர்ப்பாட்டமோ. போராட்டமோ. ஒரு ஜெயிலோ, ஒரு நாள் காலையில் கைதாகி மாலையில் 5:00 மணி வரையிலும் திருமண மண்டபத்தில் இருந்து வந்த வரலாறு கூட விஜய்க்கு கிடையாது.

**தோழர் தியாகு:** எனக்கு இதுல என்ன வருத்தம் என்றால், நான் வெளிப்படையா சொல்றேன். இப்படி ஒருத்தர்கிட்டே போய் தி.மு.க. தோக்கலாமா? எனக்கு தி.மு.க. மேலதான் வருத்தம். மக்கள் மேல வருத்தமில்லை. நான் என்னைக்குமே மக்களை குறை சொல்ல மாட்டேன். மக்களை இந்தப் பக்கம் தள்ளி விட்டீங்க நீங்க.

**நெறியாளர்:** சார் நிறைவா கேட்கணும் ஒரு பாசிசம் அப்படின்னு ஒன்றை எதிர்க்கிறோம். அப்படின்னு த.வெ.க. சொன்னது கொள்கை எதிரின்னு பி.ஜே.பி.யை சொன்னாங்க அவங்க கூட்டணியில் இருக்கிறவங்கல்லாம் எதிர்க்கிறாங்க, காங்கிரஸ் எதிர்க்கிறது, சி.பி.ஐ., சி.பி.எம்., எதிர்க்குது, வி.சி.கே. எதிர்க்கிறது. ஆனா இவருடைய குறி விஜய் டி.வி.கே. டி.வி.கே. உடைய அமைச்சர்கள் இவங்களோட குறி வந்து பி.ஜே.பி. இல்ல டி.எம்.கே., டி.எம்.கே.க்கு எதிரா சாலிடான எவிடன்ஸ்ஸோட தர்க்கபூர்வமான விமர்சனங்களையோ குற்றச்சாட்டுகளையோ வச்சா அதுல ஒரு நியாயம் இருக்கு, அதை கடந்து இந்த மாதிரி பிலோ த பெல்ட் இறங்கி அடிக்கிறது, பேசுறது எப்படி புரிஞ்சுக்கு நீங்க, ஏன் பண்றாங்க?

**விடுதலை இராஜேந்திரன்:** இதுல இன்டைரக்ட் அஜெண்டான்னு பாத்தீங்கன்னா, பி.ஜே.பி.க்கு ஒரு பாதைய அமைத்துக் கொடுக்கிற மாதிரிதான் எனக்குத் தெரியுது. ஏன்னா ஒரு தத்துவார்த்த கட்சிய வந்து ஒன்னும் இல்லாம நீங்க காலி பண்ணிட்டீங்கன்னா, வலதுசாரி பிற்போக்கு மதவாத சக்திகள் ஈசியா இங்க காலூன்றுவதற்கு அழைச்சிட்டு வரதுக்கு அவங்களுக்கு ஒரு வாய்ப்பை உண்டாக்கணும் அப்படிங்கிற விஷயத்தை வந்து பி.ஜே.பி. சார்பா இந்த த.வெ.க. செஞ்சிட்டு இருக்கு, அப்படிங்குற முடிவுக்குதான் வர வேண்டிய இருக்கு. பி.ஜே.பி. எதிர்ப்பும் கூட இவங்ககிட்ட ஒரு கன்ஸ்ட்ரவ்டிவான கொள்கை ரீதியான எதிர்ப்பு இல்லை. டோக்கனா சட்டசபையில் வந்து ஒரு தீர்மானத்தை போடுறாங்க. அதோட அவங்க விஷயம் முடிஞ்சு போயிடுது.

அதைத் தாண்டி இப்ப 1000 விஷயங்கள் வந்து உரிமைகளை பறிக்கிறது பல்வேறு விஷயங்கள் எல்லாம் வந்துட்டு இருக்கு. ஸ்டாலின் முதலமைச்சராக இருந்த காலத்துல இந்த ஒன்றிய ஆட்சியினுடைய எதுக்குறப்ப எந்தெந்த முறையில் அதை எதிர்த்தாரு எந்தெந்த வடிவங்களில் அதை எதித்தாரு. நாடாளுமன்றத்தில் போய் பேச வைக்கிறது இங்க வந்து கூட்டங்களை போட்டு பேச வைக்கிறது. அதற்கான கவர்னரை வச்சு பேச வைக்கிறது. இது மாதிரி பல்வேறு அத்தனை கருவிகளையும் பயன்படுத்தி, அவர் வந்து ஒன்றிய அரசினுடைய அந்த அடக்கு முறையையும், அதிகார முறைகளையும் எதிர்க்கின்ற ஒரு இயக்கமாக தி.மு.க. ஆட்சி நடத்தப்பட்டது. இப்ப ஒன்னுமே இல்லை சட்டசபையில் ஒரு தீர்மானம் போட்டு, அதோடு முடிகிற விஷயமா இருக்கிறது.

**தோழர் தியாகு:** அன்றைக்கு இந்தக் கூச்சல் குழப்பத்துக்கு இடையில் ரெண்டு மோசமான சட்டங்களை நிறைவேற்றினாங்க.

**நெறியாளர்:** மிசாவுக்கே வந்துருவோம்; மிசா ஒரு அவருக்கு ஈடான ஒரு அரசியல் தலைவர். விஜய்க்கு ஈடான அரசியல் தலைவர்னா. எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வச்சுக்கங்க, அவர் மீது இவருக்கு ஒரு காட்டம் இருக்கிறது, அல்லது இவர் கடுமையா விமர்சிக்கிறார் அல்லது அவர் இவரை கடுமையா விமர்சிக்கிறார் என்பது கூட சமகால ஒரு அரசியல் ஆளுமைகள் அப்படின்னு கடந்துக்கலாம். இவரை விட பல மடங்கு அரசியல்ல தியாகம் பண்ணவங்கள கலைஞர் அவர்கள் தொடங்கி முரசொலி மாறன் தொடங்கி ஸ்டாலின் அவர்கள் வரையிலும் பேசுறதை அன்றைக்குப் பேச வேண்டிய தேவையும் அதனுடைய பின்புலம் என்ன?

**விடுதலை இராஜேந்திரன்:** இது என்ன பின்புலம்ன்னு தெரியவில்லை. உதயநிதி ஸ்டாலின் பற்றி பேசுறதுக்குக் கூட இவருக்கு தகுதி கிடையாது என்பது என்னுடைய கருத்து. உதயநிதி ஸ்டாலின் பேசுகிற விஷயத்துக்கு அவர் ஒன்னும் பதில் சொல்றது இல்ல. அமைதியா தான் இருக்கிறாரு, போயிட்டு வந்ததுக்கு அப்புறம், அடுத்த நாள் போய் வீட்டில் எழுதிட்டு வந்து திரும்பி படிச்சிட்டு இருக்கிறாரு. உதயநிதி ஸ்டாலின் கேட்கிற ஷார்ப்பான பல விஷயங்களுக்கு அவருக்கு ஒரு பதிலும் இல்லை. இதை விட்டுட்டு, இவர் வந்து இவருக்கு போறது முதலமைச்சர் ஸ்டாலினுக்கு போறது, அப்பறம் எமர்ஜென்சி காலத்துக்கு போறது, தமிழ்நாட்டு அரசியல்ல வந்து பல தியாகத் தழும்புகளை ஏற்று, தமிழ்நாட்டினுடைய வரலாற்றில் இடம் பெற்று தமிழ்நாட்டினுடைய போராட்ட கலங்களை எல்லாம் கண்ட ஒரு பெரிய ஒரு மாவீரரை போல, தன்னை சித்தரிச்சுக்கிட்டு ஒரு மூன்று வருஷத்துக்கு முன்னாடி ஒரு அரசியல் கட்சி தொடங்கி, இப்போ பதவியில் உட்காந்துகிட்டு, இப்போ தமிழ்நாட்டினுடைய அரசியல் அத்தாரிட்டியே நான்தான், தமிழ்நாட்டு மக்களுடைய ஏக பிரதிநிதியே நான்தான், என்னை யாரும் கேள்வி கேட்க முடியாது. நான் என்ன வேணாலும் செய்வேன்னு சொல்லி அங்கு வந்து உடல் மொழியை காட்டுறது, அந்த வீர வசனம் பேசுறது, இதெல்லாம் வந்து எல்லோரும் சொல்கிற மாதிரி அந்த ஸ்டுடியோ ஷூட்டிங் அப்படிங்கிற எல்லைக்குத்தான் வர வேண்டியிருக்கு!

**நெறியாளர்:** மிக்க நன்றி பல வரலாறுகளை பேசி இருக்கோம். இன்னுமும் பேச வேண்டியது இருக்கும். இன்னொரு நாள் நம்ம பேசலாம். மிக்க நன்றி!

இவ்வாறு சன் நியூஸ் தொலைக்காட்சியில் சிறப்பு விவாதம் நடைபெற்றது.